## ✠ <u>மக்கள் அனைவருடைய பிறப்பும் ஒன்றே</u>

**ஆதியான வைம்புலன்க ளவையுமொக்கு ளொக்குமோ**

**யோனியிற் பிறந்திருந்த துன்பமிக்கு மொக்குமோ**

**வீனர்கள் பிதற்றுவீர் மெய்மையே யுணர்த்திரேல்;**

**ஊனுறக்க போகமு முமக்கெனக்கு மொக்குமே!!!**

**<u>இதன் விளக்கம்:</u>**

உலகில் உள்ள அனைவருக்கும் உங்களுக்கு இருப்பது போல அனைத்தும் அமைந்துள்ளது. பாவ புண்ணியங்களுக்கு காரணமான ஐம்புலன்களும், அன்னையின் வயிற்றில் பத்து மாதம் இருந்து பிறந்த இன்ப-துன்பங்களும், உணவு உறக்கம், போகம் போன்றவைகளும் யாவருக்கும் ஒன்றாகவே அமைந்துள்ளது. அதுபோல் உடலில் அனைவருக்கும் ஒரே மாதிரி அமைந்திருக்கும். மெய்பொருளை உணராமல் பிதற்றுகின்ற வீணர்களே! மெய்யை உணருங்கள்.

✠ <u>இன்பம் - துன்பம்</u>

இன்பங்களும், துன்பங்களும், இரண்டறக் கலந்த கலவைதான் இவ்வுலக வாழ்க்கை. இன்பம் நிறைந்து மகிழ்ச்சியுடன் வாழ வேண்டிய உலகத்தில் துன்பம் நிறைந்து வாழ்ந்து அழிந்து கொண்டுள்ளார்கள்.

✠ வாழ்க்கை என்பது சுழலும் சக்கரம். எப்போதும் ஒரே போல இருக்காது. இந்த துன்பம் என்பது நிரந்தரமல்ல. காலம் மாறும் என்பதை உணர வேண்டும். துன்பம் என்பது நமது வாழ்வில் பல பாடங்களைக் கற்றுத் தரக் கூடியது. இவ்வுலகில் யாவரும் சமம் என்று வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை நாம் உணர வேண்டும்.

✠ <u>குடும்ப வாழ்க்கையில் இருந்து கொண்டே கடவுளைத் தேடலாம்</u>

சன்னியாசி யானவருள் மூடருண்டு
சம்சாரம் செய்பவருள் ஞானியுண்டு

<u>இதன் விளக்கம் :</u>

✠ ஒருவன் துறவை மேற்கொண்டு சன்னியாசியாக ஆன பின்புதான் ஞானியாக வேண்டுமென்பது இல்லை. குடும்ப வாழ்க்கையில் இருந்து கொண்டும் தகுந்த நெறிப்படி ஒழுகினால் ஞானியாவர். இறைஞானம் பெறுவதற்கு மன தூய்மை இருப்பது வேண்டும். தூய்மையான தவ வாழ்க்கை வாழ்பவர்கள் என்றாவது ஒருநாள் இறைவனை அடைவார்கள்.

✠ **மனத்தூய்மை பற்றி**

**அழுக்கறத் தினங்குளித்து அழுக்கறாத மாந்தரே**

**அழுக்கிருந்த அவ்விடம் அழுக்கிலாதது எவ்விடம்**

**அழுக்கிருந்த அவ்விடத்து அழுக்கறுக்க வல்லிரேல்**

**அழுக்கிலாத சொதியோடு அணுகி வாழலாகுமே!!!**

**இதன் விளக்கம் :**

அழுக்குப் போக வேண்டும் என்று தினந்தினம் நீரில் குளித்து அழுக்கு அகலாத மனிதர்களே, அழுக்கான உடம்பில் அழுக்கான இடம் எது என்பதனை அறிந்தீரா? அவ்விடத்தில் மனதை நிறுத்தி அம்மனத்தில் உள்ள ஆசைகளை, பாவங்களையும், பக்தி, தொண்டு, யோகம், ஞானம் என்ற சாதனங்களால் அறவே ஒழித்து அவ்விடத்தில் சக்தியாக விளங்கும் ஈசனோடு இணைந்து மரணமிலா பெரு வாழ்வு வாழலாம் என்பதே இந்தப் பாட்டின் அர்த்தமாகும்.